திருஞானசம்பந்தர் அருளிய

# திருஎழுகூற்றிருக்கை

திருச்சிற்றம்பலம்





| |
|---|
| ஓர் உரு ஆயினை 1 |

| | | |
|---|---|---|
| மான் ஆங்காரத்து 1 | ஈர் இயல்பு ஆய் 2 | ஒரு விண் முதல் பூதலம் 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| ஒன்றிய 1 | இருசுடர் உம்பர்கள் பிறவும் 2 | படைத்து, அளித்து,அழிப்ப மும்மூர்த்திகள் ஆயினை 3 | இருவரோடு 2 | ஒருவன் ஆகி நின்றனை 1 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஓர் ஆல் நீழல் 1 | ஒண் கழல் இரண்டும் 2 | முப்பொழுது ஏத்திய 3 | நால்வர்க்கு ஒளிநெறி காட்டினை 4 | நாட்டம் மூன்றாகக் கோட்டினை 3 | இரு நதி அரவமோடு 2 | ஒருமதி சூடினை 1 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஒருதாள் 1 | ஈர் அயில் 2 | மூ இலைச் சூலம் 3 | நால்கால் மான்மறி 4 | ஐந்தலை அரவம் ஏந்தினை 5 | காய்ந்த நால்வாய் 4 | மும் மதத்து 3 | இரு கோட்டு 2 | ஒருகரி ஈடு அழித்து உரித்தனை 1 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஒரு தனு 1 | இருகால் வளைய வாங்கி 2 | முப்புரத்தோடு 3 | நானிலம் 4 | அஞ்சக் கொன்று தலத்து உற அவுணரை 5 | அறுத்தனை 6 | ஐம்புலன் 5 | நால் ஆம் அந்தக்கரணம் 4 | முக்குணம் 3 | இருவளி 2 | ஒருங்கிய வானோர் ஏத்த நின்றனை 1 |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஒருங்கிய மனத்தோடு 1 | இரு பிறப்பு ஓர்ந்து 2 | முப்பொழுது குறை முடித்து 3 | நால்மறை ஓதி 4 | ஐவகை வேள்வி அமைத்து 5 | ஆறு அங்கம் முதல் எழுத்து ஓதி வரன்முறை பயின்று 6 | எழு வான்தனை வளர்க்கும் பிரமபுரம் பேணினை 7 | அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை 6 | இகலி அமைந்து உணர் புகலி அமர்ந்தனை 5 | பொங்கு நால்கடல் சூழ் வெங்குரு விளங்கினை 4 | பாணி மூஉலகும் புதையமேல்மிதந்த தோணிபுரத்து உறைந்தனை 3 | தொலையா இருநிதி வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை 2 | வரபுரம் ஒன்று உணர் சிரபுரத்து உறைந்தனை 1 |
| ஒருமலை எடுத்த 1 | இருதிறல் அரக்கன் விறல் கெடுத்து அருளினை 2 | புறவம் புரிந்தனை முந்நீர்த் துயின்றோன் 3 | நான்முகன் அறியாப் பண்பொடு நின்றனை 4 | சண்பை அமர்ந்தனை ஐயுறும் அமணரும் 5 | அறுவகைத் தேரரும் ஊழியும் உணராக் காழி அமர்ந்தனை 6 | எச்சன் ஏழ் இசையோன் கொச்சையை மெச்சினை 7 | ஆறுபதமும் 6 | ஐந்து அமர் கல்வியும் 5 | மறை முதல் நான்கும் 4 | மூன்று காலமும் தோன்ற நின்றனை 3 | இருமையின் ஒருமையும் 2 | ஒருமையின் பெருமையும் 1 |

மறு விலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்
அனைய தன்மையை ஆதலின் நின்னை
நினைய வல்லவர் இல்லை நீள் நிலத்தே